## சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

## OS .397/2015

**12.08.2025.**

**வா.சா.1. அருளரசன் த/பெ. நாராயணசாமி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1, 3, 5 பிரதிவாதி கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் – சித்தமல்லி மேல்பாதி, ஓரத்தூர் கிராமத்தில் உள்ளது. மொத்தம் எத்தனை சர்வே எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் – 3 சர்வே எண்கள். தற்போது 3 சர்வே எண்களும் காலிமனையாக உள்ளதா அல்லது வீடுகள் கட்டப்பட்டுள்ளதா என்றால் – முதல் 2 நம்பரில் ஒரு ஆர்.சி.சி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.25 இலட்சம் இருக்கும். 3வது அயிட்ட சொத்து காலிமனையா அல்லது வீடா என்றால் – காலிமனைதான். வழக்கு தாக்கல் செய்யும்போது சொத்து மதிப்பீடு செய்தது யார் என்றால் – நான்தான். 1, 2 அயிட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ25 இலட்சம் பெறும் என்று கூறியுள்ளேன். ஆனால் என் வழக்கில் சொத்து விவரத்தில் வீட்டின் மதிப்பு மட்டுமே ரூ11 இலட்சம் என்று சொல்லியுள்ளேன் என்றால் – சரிதான். ரூ.11 இலட்சம் என்று மதிப்பு போட்டுள்ளது கீழ்மனைக்கு மட்டும் தான் என்றால் – சரிதான். வீட்டை குறிப்பிடவில்லை என்றால் – சரிதான். 3 அயிட்ட சொத்துக்களும் யாருக்கு சொந்தமானது என்றால் – என் தகப்பனாருக்கு பூர்விகமானது. அவர் எப்போது இறந்தார் என்றால் – 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். என் தாயார் பெயர் சுந்தரம்மாள் அவரும் இறந்துவிட்டார். என் பெற்றோருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் – 3 பெண்கள் மற்றும் 2 ஆண்கள். 5 நபர்களும் இந்த வழக்கில் தரப்பினர்களாக இருக்கிறார்களா என்றால் – இருக்கிறார்கள். 2ம் பிரதிவாதி குசலகுமாரி இறந்துவிட்டார் என்றால் – சரிதான். அவரது கணவரின் பெயர் கண்ணன் உயிருடன் உள்ளார். கண்ணன் – குசலகுமாரி தம்பதிகளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் – 3 பேர்கள். அவர்கள் இந்த வழக்கில் கண்ட 6 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் – சரிதான். இறந்துபோன எனது சகோதரியின் கணவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் – சரிதான். ஏன் அவரை சேர்க்கவில்லை என்றால் – எனக்கு தெரியவில்லை. நான் எந்த ஊரில் உள்ளேன் என்றால் – கொரடாச்சேரியில் உள்ளேன். நான் இரயில்வே துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 28 வருடங்களான நான் கொரடாச்சேரியில் குடியிருக்கிறேன் என்றால் – சரிதான். நான் தான் என் பெற்றோருக்கு வீட்டிற்கு மூத்தமகன் என்றால் – சரிதான். என் தகப்பனார் இறந்த தேதியில் இந்த வழக்கு சொத்துக்களை தவிர பரப்பனாமேடு கடம்பூர் கிராமத்தில் நிலங்கள் இருந்தது. எவ்வளவு நிலங்கள் இருந்தது என்றால் – அவரது பெயரிலும் என் அத்தை பெயரிலும் 3 ஏக்கர் நிலங்கள் இருந்தது. அந்த நிலங்கள் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் – சரிதான். அந்த நிலங்கள் உள்ள இடங்கள் எனக்கு தெரியும் என்றால் – தெரியும். ஏன் அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் – நான் அந்த நிலங்களை அனுபவம் செய்து வருகிறேன். அதனால் என் அனுபவத்தில் உள்ள சொத்தை சேர்க்கவில்லை. எத்தனை வருடங்களாக அனுபவம் செய்து வருகிறேன் என்றால் – என் அப்பா இறந்தபிறகிலிருந்து நான்தான் அனுபவம்செய்து வருகிறேன். அந்த சொத்துக்களை பொறுத்து என்னிடம் ஏதாவது பத்திரங்கள் உள்ளதா என்றால் – இல்லை. அந்த சொத்தும், என் தகப்பனார் இறந்த வகையில் எனக்கு கிடைத்த சொத்துக்கள் தான் என்றால் – சரிதான். எவ்வாறு அந்த சொத்து எனக்கு கிடைத்தது

என்றால் – நானும் 1ம் பிரதிவாதியும் பிரிவினை செய்துக்கொண்டோம். எந்த வருடம் என்றால் – 20.11.2011ம் தேதியன்று. யார் யார் உடனிருந்தார்கள் என்றால் – நானும் என் தம்பியும் வாய்மொழியாக பேசிக்கொண்டோம். பணப்பரிமாற்றம் எதுவும் செய்துக்கொண்டோமா என்றால் – இல்லை. கொரடாச்சேரி வங்கியில் ரூ.40 ஆயிரம் ரூபாயக்கு வரைவோலை என் தம்பி என் பெயருக்கு எடுத்தார் எனறால் – அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு கொரடாச்சேரி இந்தியன் வங்கியில் கணக்குள்ளது. அந்த கணக்கை எடுத்து பார்த்தால் ரூ.40 ஆயிரம் எனது கணக்கில் வரவு வைக்கப்பட்டதா இல்லையா என்று தெரியவரும் என்றால் – சரிதான். அந்த கணக்கை இன்றுவரை பராமரித்து வருகிறேன் என்றால் – சரிதான். அதன் பாஸ்புக் என்னிடம் உள்ளது. அதன் கணக்கு விவரத்தினை என்னால்தாக்கல் செய்யமுடியுமா என்றால் – முடியும். பிரதிவாதி அறிவிப்பு கொடுத்தால் எனதுகணக்கு விவரத்தினை ஒப்படைக்க தயாராக இருக்கிறேன் என்றால் – சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஓம்/– எஸ். முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.